تاميلي
தமிழ்

معهد السنة
As-Sunnah College

MahadSunnah

أحكام الأضحية

# உழ்ஹிய்யாவின் சட்டங்கள்


ஆசிரியர்:

கலாநிதி அஷ்ஷெய்க் ஹைதம் முஹம்மத் சர்ஹான்

முன்னால் மதீனா புனித பள்ளி கலாசாலை ஆசிரியர்,

ம:ஹத் சுன்னாஹ் இணையதள மேற்பார்வையாளர்.

*www.alsarhaan.com*

WWW.MAHADSUNNAH.COM

# أحكام الأضحية
# உழ்ஹிய்யாவின் சட்டங்கள்

இறையடியார்கள் பிராணிகளை அறுத்துப் பலியிட்டு இறைவனிடம் நெருக்கத்தைப் பெற வேண்டும் என ஆசைப்படுவது இயல்பான ஒன்றுதான்; அதற்காகத்தான் உழ்ஹிய்யா எனும் வணக்கத்தை இஸ்லாத்தில் மிக உன்னதமான கிரியைகளில் ஒன்றாகவும் வலியுறுத்தப்பட்ட சுன்னத்துகளில் ஒன்றாகவும் இறைவன் ஆக்கியுள்ளான்.

உழ்ஹிய்யாவை நிறைவேற்றும் நேரத்தைப் பொறுத்தவரை பெருநாள் தொழுகை முடிவடைந்ததிலிருந்து தஷ்ரீக் தினங்கள் என்றழைக்கப்படும் பெருநாளை அடுத்து வரும் மூன்று தினங்களில் மூன்றாம் நாள் சூரியன் மறையும் வரைக்கும் நிறைவேற்றலாம்.

பலிப் பிராணிகளை பொறுத்தவரை கால்நடைகள் எனப்படும் ஆடு, மாடு ஒட்டகை ஆகியவற்றை மாத்திரம் கொடுக்க வேண்டும்.

இவை தவிர்ந்த ஏனைய கோழி, முயல், மான் என வேறு எதையும் கொடுக்க முடியாது.

அறுவைப் பிராணி கொழுத்ததாகவும் நல்ல தோற்றமுடையதாகவும் இருப்பது நன்று. இதையே திருமறை அல்குர்ஆன் வசனமும் வலியுறுத்துகின்றது.

மேலும் அவை மார்க்கம் நிர்ணயித்த வயதெல்லையை அடைந்திருக்க வேண்டும். அதாவது ஒட்டகத்திற்கு 5 வயதும், மாட்டிற்கு இரண்டு வயதும், வெள்ளாட்டிற்கு ஒரு வயதும், செம்மறி ஆட்டிற்கு ஆறு மாதங்களும் பூர்த்தியானதாக இருத்தல் வேண்டும். இவ்வயதெல்லைகளை அடையாத எதுவும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

அதேபோன்று பிராணிகளில் குருடானவை, தீராத நோயுற்றவை, நடக்க முடியாத நொண்டி, கடுமையாக மெலிந்தவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

இதற்கு மாறாக காது, வாய், கொம்பு ஆகியவற்றில் சாதாரண குறைகள் காணப்படுமாயின் அது தடையாக அமையாது.

ஆகவே, நாம் தெரிவுசெய்கின்ற அறுவைப் பிராணி குறைகளற்ற, தரமானதாக இருப்பதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யாவை பலர் சேர்ந்து கூட்டாக நிறைவேற்றலாமா? அதிகபட்சம் எத்தனை பேர் சேரலாம்?

ஒட்டகம், மாடு ஆகிய இரண்டிலும் ஏழு நபர்கள் கூட்டாக இணைந்து கொள்ளலாம், ஆனால் ஆட்டைப் பொறுத்தவரை அதில் கூட்டாக இணைய முடியாது. சஹாபாக்கள் காலத்தில் ஹஜ், உம்ரா கடமைகளின் போது ஏழு பேர், ஒட்டகம் மாடு இரண்டையும் கூட்டாகச் சேர்ந்து நிறைவேற்றியதாக வந்துள்ளது.

ஜாபிர் (ரழி) அவர்கள் கூறுகிறார்கள்: ஹு தைபிய்யா உடன்படிக்கை வருடம் நாம் நபியவர்களுடன் ஒட்டகம், மாடு இரண்டிலும் 7 பேர் இணைந்து அறுத்துப் பலியிட்டோம்.

மற்றுமொரு அறிவிப்பில்: நபியவர்களுடன் நாம் ஹஜ் செய்தோம், ஏழுபேர் சார்பாக ஒட்டகம், மாடு ஆகியவற்றை அறுத்தோம் என வந்துள்ளது.

மாமேதை இமாம் நவவி (ரஹ்)அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்:

மேற்கண்ட நபி மொழிகள் உழ்ஹிய்யாவில் பலர் கூட்டாக இணைவதற்கு ஆதாரமாக அமைந்துள்ளன. மேலும் ஆட்டில் கூட்டாக இணைவது கூடாது என்பதும் உலமாக்களால் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. மேலும் இந்த நபிமொழிகளில் ஒட்டகம், மாடு ஆகிய இரண்டிலும் ஏழு பேர் சேரலாம் என்றும், இவை ஒவ்வொன்றும் 7 ஆடுகளுக்கு சமம் என்றும் தெளிவாகிறது.

இஹ்ராம் கட்டிய ஒருவருக்கு ஏழு அறுவை பிராணிகள் கடமையானால் அவர் அதற்கு பதிலாக ஒட்டகத்தை அல்லது மாட்டை பலியிடுவது போதுமாகும்.

ஆய்வுக்கான அறிஞர்கள் பேரவை இது பற்றி வினவப்பட்ட போது பின்வருமாறு பதிலளித்துள்ளது:

ஒட்டகம், மாடு இரண்டும் ஏழு நபர்களுக்கு போதுமாகும், அவர்கள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களாகவோ, அல்லது பல்வேறு குடும்பங்களைச் சேர்ந்தவர்களாகவோ இருக்கலாம். அவர்கள் உறவினர்களாகவோ அதற்கு மாற்றமாகவோ இருக்கலாம்.

இதையே நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் செயல் எடுத்துக் காட்டுகின்றது.